

ஸ்ரீ இராஜ ராஜன் கல்விக்குழுமத்தின் கல்வி ஆலோசகர், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் **S.**சுப்பையா அவர்கள் (இடமிருந்து 2-வது) மாணவியைப் பாராட்டி பரிசுத் தொகை **ரூ.10 ,000** வழங்கிய நிகழ்வு. அருகில் மாணவி மு.சர்மிளா மற்றும் முதல்வர் ரா. சிவகுமார் அவர்கள்.

## ஸ்ரீ இராஜ ராஜன் மகளிர் கல்வியியல் கல்லூரி மாணவி மாநில அளவில் நடைபெற்ற தடகள போட்டியில் தங்கப்பதக்கம் வென்று சாதனை!

ஸ்ரீ இராஜ ராஜன் மகளிர் கல்வியியல் கல்லூரியில் M.Ed., இரண்டாமாண்டு பயிலும் மு.சர்மிளா, மாற்றுத்திறனாளியான இவர் தங்கப்பதக்கம் மற்றும் வெள்ளிப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

தமிழ்நாடு பாரா ஒலிம்பிக் விளையாட்டு சங்கம் நடத்திய மாநில அளவிலான தடகளப்போட்டியானது கோயம்புத்தூரில் **14.02.21** முதல் **16.02.21** வரை நடைபெற்றது. இப்போட்டியில் காரைக்குடியை அடுத்த அமராவதிபுதூரில் உள்ள ஸ்ரீ இராஜ ராஜன் மகளிர் கல்வியியல் கல்லூரியில் **M.Ed.,** இரண்டாமாண்டு பயிலும் மாற்றுத்திறனாளியான மாணவி மு.சர்மிளா கலந்து கொண்டார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து 20க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்ட ஈட்டி எறிதல் போட்டியில் முதலிடமும், குண்டு எறிதல் போட்டியில் இரண்டாமிடமும் பிடித்து தங்கப்பதக்கமும் மேலும் வெள்ளிப்பதக்கமும் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

மேலும் இவரது கடினப்பயிற்சியால் ஏற்கனவே 2019-ல் மாநில அளவில் குண்டு மற்றும் வட்டு எறிதலில் 2 தங்கப்பதக்கங்களும் ஈட்டி எறிதலில் 1 வெள்ளிப்பதக்கமும் 20200-ல் 100மீ, 200மீ நடைப் போட்டி மற்றும் குண்டு எறிதலில் 3 தங்கப்பதக்கங்கள் உள்ளிட்ட **6 தங்கப்பதக்கங்களையும்** 2 **வெள்ளிப்பதக்கங்களையும்** வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு போட்டிகளில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைப் பெற்ற மாற்று திறனாளியான மாணவி சர்மிளாவை, அவர் பயிலும் ஸ்ரீ இராஜ ராஜன் மகளிர் கல்வியியல் கல்லூரியில் கல்விக்குழுமத்தின் கல்வி ஆலோசகர், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் **S.**சுப்பையா அவர்கள் மாணவியை பாராட்டி பரிசுத் தொகை **ரூ.10 ,000** வழங்கினார்கள்.

மேலும் ஸ்ரீ இராஜ ராஜன் மகளிர் கல்வியியல் கல்லூரியின் முதல்வர்,ரா.சிவகுமார், பேராசிரியர்கள், மற்றும் மாணவ மாணவியர்கள் அனைவரும் பாராட்டினார்கள்.